Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் கால சிற்பங்களில் வணிக வடிவங்கள் மற்றும் குறியீடுகள்

**முனைவர்.கு.கவிமணி**
**பயிற்றுநர்**
**அரசுகவின் கலைக்கல்லூரி,சென்னை-03**
kavimaniku@gmail.com

28

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்தில் சங்ககாலம் முதலே உழவும் வாணிகமும் சிறந்த தொழில்களாக விளங்கின. உள்நாட்டு வணிகம் வெளிநாட்டு வணிகம் என்று இருவகை வணிகங்கள் சங்ககாலத்தில் நடைபெற்றன. வரலாற்றுக் காலத்தில் ஆட்சிபுரிந்த பல்லவர் காலத்திலும் சிறப்பான வாணிகம் நடைபெற்றுள்ளது. தமிழகத்தில் கூல வணிகர் (கூலம் = நவதானியம்), பொன் வணிகர், அறுவை வணிகர் (துணி), மணி வணிகர் சேனை வணிகர் போன்ற வணிகர்கள் இருந்தமைக்கான சான்றுகளாக தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டு வரைவுகள் மற்றும் பல்லவ சிற்பங்கள் திகழ்கின்றன. அத்தகைய சிற்ப வரைவுகளை முன்வைத்து தமிழகத்தில் நடைபெற்ற வாணிப முறைகளைப் பற்றி ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள் :** பல்லவர் வணிக வரைவுகள், குறியீடுகள், பல்லவர் அடையாள வணிகம்.

**அறிமுகம்**

வணிகர்களின் உலகலாவிய வணிகத் தொடர்பு, வணிகர்கள் கோவில்கள் கட்டுமானம் மற்றும் பிற நற்செயல்களுக்கு அளித்த கொடைகள் பற்றிய தகவல்கள் வணிகக் குழுவினர் பற்றிய கல்வெட்டுகளில் அறியமுடிகின்றது. வணிகர்கள் அரசர்களுக்கு இணையாக தங்களது வணிகச் சின்னங்களையும், மெய்க்கீர்த்திகளையும் கூட தங்கள் கல்வெட்டுகளில் பொறித்துள்ளனர். பல்வேறு வணிகர் குழுவினர் பற்றிய கல்வெட்டுகள் இதுவரை பன்னாட்டளவில் 314 கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் தமிழகத்தில் 118 கல்வெட்டுகளும், கர்நாடகாவில் 132 கல்வெட்டுகளும், ஆந்திராவில் 35 கல்வெட்டுகளும், மகாராஷ்டிராவில் 2 கல்வெட்டுகளும், கேரளத்தில் 8 கல்வெட்டுகளும், தென்கிழக்காசிவில் இந்தோனேசியா (சுமத்ரா), தாய்லாந்து, மியான்மர் நாடுகளில் 4 கல்வெட்டுகளும், இலங்கையில் 15 கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆயினும், பல்லவர்கால சிற்பங்களிலும் தமிழர் வணிகத்திற்கான சிற்பங்கள் காணப்படுகின்றன. அத்தகைய வணிக சிற்பங்களைப்பற்றி ஆய்வே இக்கட்டுரை

**பல்லவர் கால வணிக வரைவுகள்**

பல்லவர்கள் சீனா, எகிப்து, ரோம் உள்ளிட்ட நாடுகளோடு வாணிபம் செய்ததற்கான சான்றுகள் இன்றும் மாமல்லபுரத்தில் இருக்கின்றன. இங்குள்ள கிருஷ்ணர் மண்டபத்தில் உள்ள சிற்பங்கள் இந்திய-சீன உறவுக்கு சாட்சியாக இருக்கின்றன. பல்லவர்களின் வீரத்துக்கு அடையாளமாகப் பல்வேறு நாடுகளில் ஆதிக்கம் செலுத்தியதை சிற்பங்களாக வடித்திருக்கிறார்கள்.

சிங்கத்தை நாட்டின் அரசனாகக் கருதுபவர்கள் பல்லவர்கள். பல்வேறு நாடுகளில் ஆதிக்கம் செலுத்தியதற்கான அடையாளமாகக் கிருஷ்ணர் மண்டபத்தில் நான்கு சிங்கங்கள் அடங்கிய சிற்பங்கள் உள்ளன.



முதலாவதாக இருப்பது பல்லவர்களின் சிங்கம். இரண்டாவதாக இருப்பது மனிதத் தலையுடன்கூடிய சிங்கம், இது எகிப்து நாட்டோடு தொடர்புடையது. மூன்றாவதுள்ள டிராகன் முகத்தோடு கொண்ட சிங்கம் சீனா நாட்டுடன் தொடர்புடையது. நான்காவது சிங்கம் ரோம் நாட்டுடன் தொடர்புடையது. இவையெல்லாமே பல்லவர்களின் வெளிநாட்டு வணிகத்துக்கான அடையாளம். அதே மண்டபத்தில் கோவர்த்தன கிரி என்னும் சிலை உள்ளது. இதில் புத்தர் பசுவிடம் பால் கறக்கும் சிலை வடிக்கப்பட்டுள்ளது.



**யுவான் சுவாங் சிற்பமும் பதிவுகளும்**

சீனாவிலிருந்து யுவான் சுவாங் வந்து சென்றதற்கான அடையாளமாகக் கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள பூஞ்சேரியில் மண்டபம் ஒன்று உள்ளது. இந்த மண்டபத்தில் உள்ள தூணில் யுவான் சுவாங் சிலை உள்ளது. அவர் வந்ததற்கான கல்வெட்டு ஒன்றும் இருந்துள்ளது. தற்போது அந்தக் கல்வெட்டு எங்கு இருக்கிறது எனத் தெரியவில்லை. கி.பி 640-ம் ஆண்டில் இந்தியா வந்த யுவான் சுவாங் என்ற சீனப் பயணி அதன் அனுபவங்களை எழுதியிருக்கிறார். கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் வந்தவர், இங்குள்ள புத்த தலங்களுக்குச் சென்று புத்த மதம் பற்றிய ஆய்வுகளை

மேற்கொண்டுள்ளார். தமிழகத்தில் மாமல்லபுரம் மற்றும் காஞ்சிபுரம் வந்து தங்கியிருக்கிறார். தன்னுடைய பயண அனுபவங்கள் குறித்து யுவான் சுவாங் " காஞ்சித் தலைநகர் வளமான பூமி. பழங்களும் பூக்களும் பெரு மதிப்புடைய பல்வேறு பொருள்களும் நிறைந்திருக்கின்றன. இங்குள்ள மக்கள் வீரம் மிக்கவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்கிறார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். பட்டு வாணிபம் மற்றும் பட்டுத் தொழில்நுட்பம் சீனர்களிடமிருந்துதான் காஞ்சிபுரத்துக்குப் பரவியிருக்கிறது.



*(கிழக்குக் கடற்கரை சாலை பூஞ்சேரியில் உள்ள மண்டபத்தில் யுவான் சுவாங் சிலை)*

முடிவுரை

பழந்தமிழர் வாணிப வழிகாட்டலுக்கு பல்லவ சிற்பங்கள் முக்கிய பங்குவகித்துள்ளன. வணிகத்தின் தனித்துவத்தை பொருட்களின் தரத்தை பிற நாட்டவர் அறிந்திட ஏதுவாக குறியீடுகளை வணிகர்கள் பயன்படுத்தியுள்ளனர். வணிகர்கள் பயன்படுத்திய வணிக பொருட்களை அழகுபடுத்துதல், அடையாளப்படுத்துதல், வெளிநாட்டு, உள்நாட்டு வணிக உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரை சென்று சேர்ந்திடவும் ஓவிய வரைவுகள் மற்றும் சிற்பங்கள் பெரிதும் பயன்பட்டுள்ளதை இக்கட்டுரை தெளிவுபடுத்தும். இன்று நாம் கூறும் அடையாள உற்பத்தி (Brand production) தமிழர்கள் மத்தியில் பல்லவர்கள் காலம் முதலே இருந்துள்ளதையும் மேலும், வரைவுக்கலைகள் அழகியல் கலையாக மட்டுமல்லாமல் வணிகக் கலையாகவும் (Industrial art) இருந்துள்ளதை தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற பல்லவ வரைவுகள், குறியீடுகள் விளக்குவது மட்டுமல்லாமல் சமூகம்,பண்பாடு,வணிகம்,அரசியல் என பல படிநிலைகளை தெரிவிக்கும் ஊடக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கலையாகவும் சிற்பங்கள் இருப்பதை இக்கட்டுரையில் அறிய முடியும்.

**துணை நின்ற நூல்கள்**

1.தமிழ்நாடுஅரசு தொல்லியல்துறை இணைய வணிக கல்வெட்டு செய்தி,02.02.2021.

2.கல்வெட்டியல் எளிய அறிமுகம், கல்வெட்டியல் ஆய்வாளர் ராம்ஜி நேர்காணல்,தஞ்சாவூர்.2013. செய்தி.

3.தமிழ்நாடுஅரசு தொல்லியல்துறை இணைய வணிக கல்வெட்டு செய்தி,02.02.2021.

4.செப்டம்பர் 19, 2018 தேதி நாளிதழ்களில் விரிவான செய்தி, புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழகம்

5. முனைவர்.கண்ணன்,இ.ஆ.ப. திருப்பருத்திக்குன்றம் ஓவியங்கள், சென்னை அரசு அருங்காட்சியகம்வெளியீடு,2010.

6.மார்க்கோபோலோ பயண குறிப்புகள், முகில் பதிப்பகம், இராயப்பேட்டை,சென்னை.2018.